டிஜிட்டல் டெய்லி
# அக்ரி-டாக்டர்
agridoctor.in




agridoctor.in | 9.8.2024 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 044 - Madurai | Online Edition

# நடப்பு நிதியாண்டில் ஜூலை வரை 2.60 லட்சம் டன் வெங்காயம் ஏற்றுமதி

புது தில்லி, ஆக.8

2024, மே 4 முதல் வெங்காய ஏற்றுமதி தடையை அரசு நீக்கியுள்ளது. குறைந்தபட்ச ஏற்றுமதி விலை (னிசிஇண) ஒரு மெட்ரிக் டன்னுக்கு 550 டாலர் மற்றும் ஏற்றுமதி வரி 40% உடன் ஏற்றுமதிசெய்ய அனுமதித்துள்ளது. 2024, ஜூலை 31 வரை, நடப்பு 2024-25-ம் நிதியாண்டில் மொத்தம் 2.60 லட்சம் டன் வெங்காயம் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.




கடந்த ஆண்டுடன் (2023) ஒப்பிடுகையில், நடப்பு ஆண்டில் வெங்காய விவசாயிகளின் விலை வருவாய் மிகவும் அதிகமாக உள்ளது. மகாராஷ்டிராவில் வெங்காயத்தின் சராசரி மாதாந்திர மண்டி மாதிரி விலைகள் கடந்த ஆண்டு (2023) இதே காலகட்டத்தில் குவிண்டாலுக்கு ரூ.693 முதல் ரூ.1,205 வரை இருந்த நிலையில், 2014 ஏப்ரல் - ஜூலை மாதங்களுக் கிடையில் குவிண்டாலுக்கு ரூ.1,230 முதல் ரூ.2,578 வரை இருந்தது. நடப்பு ஆண்டில் வெங்காயத்தின் சராசரி கொள்முதல் விலை, குவிண்டாலுக்கு ரூ .2,833 ஆக இருந்தது, இது கடந்த ஆண்டு கொள்முதல் விலையான குவிண்டாலுக்கு ரூ.1,724 ஐ விட 64% அதிகமாகும்.

இந்தியா வெங்காயத்தின் நிகர ஏற்றுமதியாளராக உள்ளது மற்றும் ஏற்றுமதி மூலம் வருவாய் ஈட்டுகிறது.

கடந்த மூன்று ஆண்டுகளில் இந்தியா ஈட்டிய நிகர ஏற்றுமதி மதிப்பு 2021-22-ம் ஆண்டில் 3,326.99 கோடி ரூபாயாகவும், 2022-23-ம் ஆண்டில் 4,525.91 கோடி ரூபாயாகவும், 2023-24 ஆம் ஆண்டில் 3,513.22 கோடி ரூபாயாகவும் இருந்தது.

இதனை மத்திய நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோகத் துறை இணையமைச்சர் பி.எல்.வர்மா மக்களவையில் தெரிவித்தார்.

# ஒகேனக்கல்லில் நீர்வரத்து 8,000 கன அடியாக சரிவு



ஒகேனக்கல், ஆக.9

ஒகேனக்கல் காவிரியாற்றில் நீர்வரத்து நேற்று வினாடிக்கு, 8,000 கன அடியாக சரிந்தது.

காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் தென்மேற்கு பருவ மழையால், கர்நாடகாவிலுள்ள அணைகள் நிரம்பி, நீர்வரத்து அதிகரித்துள்ளது. அணை பாதுகாப்பு கருதி, காவிரியில் உபரி நீர் திறக்கப்பட்டுள்ளது. நேற்று கபினி அணையிலிருந்து வினாடிக்கு, 2,729 கன அடி, கே.ஆர்.எஸ்., அணையிலிருந்து, 5,346 கன அடி என, மொத்தம், 8,075 கன அடி உபரி நீர் திறக்கப்பட்டுள்ளது.

தமிழக எல்லையான பிலிகுண்டுலுவில் நேற்று முன்தினம் மாலை, 6:00 மணிக்கு வினாடிக்கு, 17,000 கன அடியாக இருந்த நீர்வரத்து, நேற்று மாலை, 6:00 மணிக்கு, 8,000 கன அடியாக சரிந்தது. ஒகேனக்கல் காவிரியாற்றில் தொடர் வெள்ளப்பெருக்கின் போது, சேதமான மெயின் பால்ஸ், நடைப்பாதை, பெண்கள் குளிக்கும் இடம் உள்ளிட்ட பகுதிகளை பென்னாகரம் பி.டி.ஓ., சுருளிராஜன், கிலா, பாலாஜி ஆகியோர் ஆய்வு செய்தனர்.

தொடர்ந்து நேற்று, 23 வது நாளாக காவிரியாற்றில் குளிக்கவும், பரிசல் இயக்கவும் தர்மபுரி மாவட்ட நிர்வாகத்தின் தடை உள்ள நிலையில், நீர்வரத்து சரிந்ததால், பரிசல் இயக்கும் இடத்தையும், அதிகாரிகள் பார்வையிட்டு சென்றனர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# வட்ட வடிவ குழி கரும்பு சாகுபடி

சேலம், ஆக.8

அட்மா திட்டத்தின் கீழ் வட்ட வடிவ குழி கரும்பு சாகுபடி குறித்த பயிற்சி முகாம் சேலம் மாவட்டம், வீரபாண்டி வட்டாரம் இளம்பிள்ளை கிராமத்தில் நடைபெற்றது. வட்ட வடிவ குழி கரும்பு சாகுபடி என்பது ஒவ்வொரு வளையத்திலும் சுமார் 22 மூன்று மொட்டு கரணைகள் கிடைமட்டமாக வட்ட வடிவில் வரிசைகளுக்கு இடையே 100 சென்டிமீட்டர் இடைவெளியிலும், தனித்தனி குழி-களுக்கு இடையே 150 சென்டிமீட்டர் இடைவெளியிலும் நடப்பட வேண்டும்.

ஒரு ஏக்கருக்கு சுமார் 2700 குழிகள் டிராக்டர் மூலம் வரையப்பட்ட பவர் டில்லர் மூலம் குழிகள் எடுக்கப்பட்டு, குழிகளில் 5 கிலோ தொழு உரம் 100 கிராம் ஜிப்சம் மற்றும் 125 கிராம் சூப்பர் பாஸ்பேட் நிரப்பி நடவு செய்வதற்கு முன் நன்கு நீர் பாய்ச்சப்பட்டு குழியின் ஆழம் 1.25 அடி 1.5 அடி வரை கரணைகள் வைக்கப்பட வேண்டும். கரனைகளை நடவு செய்த பிறகு முப்பது தாய் தளிர்கள் மட்டும் அனுமதிக்கப்பட்டால் ஒவ்வொன்றும் 1.25 முதல் 1.75 கிலோ வரை எடையுள்ள வலுவான மற்றும் ஆரோக்கியமான அரைக்கக்கூடிய கரும்புகள் உருவாக வழிவகுக்கும். சரியான உர மேலாண்மை, பூச்சி மற்றும் நோய் மேலாண்மை மேற்கொண்டால் இந்த முறையில் மூன்று மடங்கு மகசூல் கிடைக்க வழி வகுக்கும் என்று பயிற்சி அளிக்கப்பட்டது.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் கே.ராஜேந்திரன் அனைவரையும் வரவேற்றார். கரும்பு அலுவலர்கள் ஆர்.சுப்பிரமணியம் மற்றும் எம்.மனோகரன் பயிற்சியாளராக கலந்து கொண்டு பயிற்சி அளித்தனர். உதவி வேளாண்மை அலுவலர் க.பழனிசாமி மற்றும் மா.ஹரிகிருஷ்ணன், கரும்பு உதவியாளர் பி.யுவராஜ் மற்றும் ஆர்.கோவிந்தராஜ், வார்டு உறுப்பினர் ஆர்.துரை ஆகியோர் கலந்து கொண்டனர்.

கரனைகளை கார்பண்டஜிம் கொண்டு விதை நேர்த்தி செய்து வளைய வடிவ குழியில் நடவு குறித்து செயல்விளக்கம் செய்து கண்பிக்கபட்டது. இப்பயிற்சியில் கலந்து கொண்ட 40 க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது. இப்பயிற்சி ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சி.சரஸ்வதி மற்றும் தீபன் முத்துசாமி செய்து இருந்தனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

# சிப்பி/பால் காளான் விலை உயர்வு ஏன்?

திருப்பூர், ஆக.8

மின் கட்டணம் உயர்வு மற்றும் இடுபொருள் விலையேற்றம் காரணமாக சிப்பி காளான் விலை கிலோ ரூ.180-200 வரை, பால் காளான் விலை ரூ.230-250 வரை விலை நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது என தமிழக சிப்பி/பால் காளான் கூட்டமைப்பின் அமைப்பாளர்கள் மதுரை ஜான்லாரன்ஸ், வேலூர் சன் மேஜிக் மஸ்ரூம் சுந்தரமூர்த்தி, Svk organic farm நம்பியூர் லோகநாதன், MS.மஸ்ரூம் பெருமாநல்லூர் அசோக் வெளியிட்ட அறிக்கை தெரிவித்துள்ளனர்.



# தரிசு நிலத்தை விளை நிலமாக மாற்றுவதற்கு அரசு மானியம்



இராமநாதபுரம், ஆக.8

இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் வட்டாரம் வேளாண்மை துறையின் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்றும் சிறப்பு திட்டத்தின் கீழ் தனி நபர் விவசாயிக்கு ஒரு ஹெக்டர் தரிசு நிலத்தை விளை நிலமாக மாற்றுவதற்கு அரசு மானியம் ரூபாய் 9,600 வழங்கப்படுகிறது. இதன்படி கும்பரம் கிராமத்தில் தரிசு நிலங்களை விலை நிலமாக மாற்றும் பணியினை வேளாண்மை இணை இயக்குனர் கண்ணையா, அமர்லால். வேளாண்மை துணை இயக்குனர் (மாநில திட்டம்) மற்றும் செல்வம் வேளாண்மை உதவி இயக்குனர் திருப்புல்லாணி ஆகியோர் பார்வையிட்டனர்.

மேலும் கும்பரம் கிராமத்தில் மண் மாதிரி சேகரித்தல் தொடர்பான முகாம் நடத்தப்பட்டது. இதில் பரமக்குடி நடமாடும் மண் பரிசோதனை நிலையம் மூலம் மண் மாதிரிகள் சேகரம் செய்யப்பட்டது.

நிகழ்ச்சியில் வேளாண்மை இணை இயக்குனர் கண்ணையா, நாகராஜன் வேளாண்மை உதவி இயக்குனர் தகவல் மற்றும் தரக்கட்டுப்பாடு ராமநாதபுரம், செல்வம் வேளாண்மை உதவி இயக்குனர் திருப்புல்லாணி, ஐஸ்வர்யா வேளாண் அலுவலர் நடமாடும் மண் பரிசோதனை நிலையம் பரமக்குடி கலைவாணி வேளாண் அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டனர். வேளாண் உதவி இயக்குனர் நாகராஜன் விவசாயிகளுடைய மண் மாதிரிகளை சேகரிப்பதன் முக்கியத்துவம் மண்வள அட்டை பரிந்துரையின் அடிப்படையில் உரம் இட வேண்டியதன் அவசியம் குறித்து விவசாயிகளிடையே விளக்கி கூறினார். அமர்லால் வேளாண்மை துணை இயக்குனர் கலைஞரின் ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் அரசு நலத்திட்டங்கள் குறித்து விளக்கி பேசினார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை முகமது யூசுப் உதவி வேளாண்மை அலுவலர் செய்திருந்தார்.

| கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் | | | | | | | 08.08.2024 |
|---|---|---|---|---|---|---|---|
| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
| 1 | கத்திரி(Hybrid) | 45 | 50 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 45 | 50 | 57 | உருளை (கோலார்) | 36 | 42 |
| 1B | கத்திரி(Nadu) | 65 | 68 | 57A | உருளை(ஊட்டி) | 60 | 66 |
| 2 | வெண்டை | 30 | 34 | 58 | மேரக்காய் | 25 | 30 |
| 3 | தக்காளி (நாடு) | 14 | 17 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 30 | 34 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 14 | 17 | 60 | கேரட் | 90 | 110 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 50 | 55 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 54 | 60 |
| 6 | புடலை | 42 | 46 | 62 | நூல்கோல் | 50 | 60 |
| 7 | பீர்க்கன் | 30 | 34 | 63 | டர்னிப் | 40 | 45 |
| 8 | சுரைக்காய் | 25 | 28 | 64 | மு.கோஸ் | 35 | 40 |
| 9 | பாகற்காய் | 50 | 55 | 65 | மு.கோஸ்(கலர்) | 40 | 45 |
| 10 | கொத்தவரை | 30 | 34 | 66 | காளிபிளவர் | 44 | 50 |
| 11 | பூசணி | 35 | 38 | 67 | பட்டாணி | | |
| 12 | அரசாணி | 25 | 28 | 68 | பூண்டு | 190 | 275 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 50 | 54 | 69 | இஞ்சி | 130 | 135 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 80 | 88 | 70 | புருக்கோலின் | 210 | 220 |
| 15 | சி.வெங்காயம் | 36 | 40 | 71 | பென்னி பீன்ஸ் | 54 | 60 |
| 16 | பெ.வெங்காயம் | 34 | 38 | 72 | குடமிளகாய் | 40 | 60 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 30 | 34 | 73 | ஊட்டி அவரை | | |
| 18 | பச்சை மொச்சை | 60 | 64 | 74 | பஜ்ஜி மிளகாய் | | |
| 19 | முருங்கை | 45 | 50 | 71A | | | |
| 20 | தேங்காய் | 30 | 34 | | | | |
| 21 | மாங்காய் | 0 | 0 | | | | |
| 22 | வாழைக்காய் | 40 | 44 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 68 | 72 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 70 | 78 | 75 | எலுமிச்சை | 85 | 95 |
| 25 | சேப்பங்கிழங்கு | 50 | 55 | 76 | கொய்யா | 45 | 50 |
| 26 | மரவள்ளி | 25 | 30 | 77 | சப்போட்டா | | |
| 27 | சர்க்கரைவள்ளி | 42 | 48 | 78 | பப்பாளி | 30 | 35 |
| 28 | கறிவேப்பிலை | 30 | 34 | 79 | மாதுளை | 150 | 200 |
| 29 | கொத்தமல்லி | 30 | 35 | 80 | திராட்சை | 110 | 120 |
| 30 | புதினா | 8 | 10 | 81 | மாம்பழம் | 100 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 15 | 18 | 82 | ஆப்பிள் / காலா | 200 | 240 |
| 32 | தண்டுக்கீரை | 15 | 18 | 83 | ஆரஞ்ச் | 90 | 100 |
| 33 | சுக்கிட்டி&வெந்தயம் | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 50 | 60 |
| 34 | அரைக்கீரை | 15 | 18 | 85 | அன்னாசி பழம் | 40 | 45 |
| 35 | சிறுகீரை | 15 | 18 | 86 | சீதாப்பழம் | 25 | 30 |
| 36 | பாலாக்கு | 15 | 18 | 87 | முலாம்பழம் | 35 | 40 |
| 37 | பருப்புக்கீரை | 15 | 18 | 88 | தர்பூசனி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | பலாப்பழம் | 30 | 32 |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 75 | 80 |
| 40 | கோவக்காய் | 40 | 46 | 91 | பூவன் | 45 | 52 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 48 | 52 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 50 | 54 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 34 | 38 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 30 | 35 | 95 | நாடன் | 40 | 45 |
| 45 | வெள்ளரி | 28 | 32 | 96 | நேந்திரன் | 58 | 62 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 30 | 34 | 97 | செவ்வாழை | 80 | 87 |
| 47 | சுண்டக்காய் | 140 | 150 | 98 | பேரிக்காய் | 120 | 160 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 35 | 40 |
| 49 | காளிபிளவர் (உள்ளூர்) | 0 | 0 | 100 | கறிப்பலா | 35 | 40 |
| 50 | நிலக்கடலை | 65 | 70 | 101 | டிராகன் ப்ரூட் | 150 | 160 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 70 | 80 |
| 52 | புளி | | | | | | |
| 53 | ஸ்வீட் கான் | 40 | 45 | 104 | நாவல் | 0 | 0 |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 28 | 30 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 25 | 30 | | | | |

# துவரை சாகுபடி மேற்கொள்ள மானியம் வேளாண்மை இணை இயக்குநர் தகவல்

புதுக்கோட்டை, ஆக.8

புதுக்கோட்டை மாவட்டத்தில் துவரை பயிர் சாகுபடி பரப்பினை அதிகப்படுத்திடும் வகையில் விவசாயிகளுக்கு மானியத்தில் இடுபொருட்கள் வழங்கப்படுகிறது என வேளாண்மை இணை இயக்குநர் (பொ) வி.எம். ரவிச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பாவது, புதுக்கோட்டை மாவட்டத்தில் உளுந்து, தட்டைபயறு, துவரை ஆகிய பயிர்கள் பொதுவாக ஆடிப்பட்டத்தில் சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. இந்நிலையில் துவரை பயிர் சாகுபடி பரப்பை அதிகரித்திடும் வகையில் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு 1750 ஏக்கர் பரப்பு விரிவாக்கம் செய்திட இலக்கு பெறப்பட்டுள்ளது. விவசாயிகள் தனிப்பயிராகவும், ஊடுபயிராகவும், வரப்பு பயிராகவும் சாகுபடி மேற்கொள்ள மானியம் வழங்கப்படுகிறது.

தற்பொழுது துவரை சாகுபடியை மேற்கொள்ளுவதற்கு உகந்த பருவமாகும். விவசாயி களுக்கு தேவையான உயிர் விளைச்சல் துவரை இரகம் எல்ஆர்ஜி 52 என்ற இரகத்தின் சான்று பெற்ற விதைகள் வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களில் தேவையான அளவு இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

ஒரு ஏக்கருக்கு தேவையான விதைகள், உயிர் உரங்கள், உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள், நுண்ணூட்ட உரங்கள் ஆகிய இடுபொருட்கள் வேளாண்மை விரிவாக்க மையங்களிலிருந்து 50 சத மானிய விலையிலும், டிஏபி 2 சத கரைசல் இலைவழி தெளிப்பு மற்றும் உழவுக்கான செலவில் 50 சதவீதம் பின்னேற்பு மானியமாகவும், அதிகபட்சமாக ஒரு ஏக்கருக்கு ரூ.2500/- மானியமாக வழங்கப்படுகிறது. மேலும், விவசாயிகள் தங்கள் பகுதி உதவி வேளாண்மை அலுவலரை அணுகி உழவர் செயலி மூலமாக முன் பதிவு செய்து மானியம் பெற்று துவரை சாகுபடி மேற்கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

எனவே, புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் துவரை பயிர் சாகுபடிக்கு தேவையான இடுபொருட்களை மானியத்தில் பெற்று துவரை சாகுபடி பரப்பினை அதிகரிக்க முன் வர வேண்டும் என புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் (பொ) வி.எம்.ரவிச்சந்திரன் அழைப்பு விடுத்துள்ளார்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# மதுரை மாவட்டம் மேலூரில் சூறாவளியால் வாழைகள் சேதம்



மதுரை, ஆக.9

மதுரை மாவட்டம், மேலூர், சென்னகரம்பட்டி பகுதியில் நேற்று மாலை பலத்த சூறாவளி காற்றுடன் மழை பெய்தது. இதில் இப்பகுதியைச் சேர்ந்த பாண்டி, குமார், மாணிக்கம் உள்பட பல விவசாயிகளின் வாழை மரங்கள் அடியோடு சாயந்தது.

விவசாயி பாண்டி கூறியதாவது : கூட்டுறவு வங்கியில் கடன் வாங்கி ஏக்கருக்கு ரூ.60 ஆயிரம் செலவு செய்து வாழை விவசாயம் செய்துள்ளேன். வாழை பயிரிட்டு 9 மாதங்களாகிறது. 15 நாட்களில் அறுவடை செய்ய வேண்டிய நிலையில் மரங்கள் மற்றும் வாழைத்தார்கள் சாய்ந்தன. இதனால் பாதித்த விவசாயிகள் கடனைக் கட்ட முடியாமல் செய்வதறியாது திகைக் கிறோம். வேளாண் அதிகாரிகள் ஆய்வு செய்து கடன்களை தள்ளுபடி செய்வதோடு, உரிய நிவாரணம் வழுங்க வேண்டும் என்றனர்.

# குளத்துபட்டி கிராம விவசாயிகளுக்கு மானிய விலையில் இடுபொருட்கள்



சிவகங்கை, ஆக.8

சிவகங்கை மாவட்டம், எஸ்.புதூர் வட்டாரத்தில் தேசிய உணவு பாதுகாப்பு ஊட்டசத்து இயக்கத்தின் கீழ் மாவட்ட திட்ட ஆலோசகர் கண்ணன் மூலம் வேளாண் விரிவாக்க மையத்தில் உணவு ஊட்டசத்து இயக்கம் – அரிசி திட்டத்தின் கீழ் வாராப்பூர் குளத்துபட்டி கிராம விவசாயிகளுக்கு மானிய விலையில் விதை நெல் உயிர் உரங்கள் உயிர் கட்டுபாட்டு காரணிகள் நெல் நுண்ணூட்டம் போன்ற இடுபொருட்கள் வழங்கப்பட்டது. மேலும் முதல்வரின் மண்ணுயிர் காத்துமண்ணுயிர் காப்போம் திட்டத்தின் கீழ் பசுந்தாள் உரப்பயிரான சணப்பை விதைப்பு செய்த வயல் குளத்துபட்டி கிராமத்தில் பார்வையிடபட்டது. வாராப்பூர் கிராமத்தில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் திட்டத்தின் கீழ் நடைபெற்ற முகாமில் பலர் கலந்து கொண்டார். ஆய்வின் போது உதவி வோளண்மை இயக்குநர், வேளாண்மை அலுவலர், துணை மற்றும் உதவி வேளாண்மை அலுவலர் உடனிருந்தார்கள் .

# தரிசு மற்றும் வறண்ட நிலத்திற்கேற்ற வேம்பு

- வேம்பு இந்தியாவின் எல்லா இடங்களிலும் கடற்கரை ஓரங்களைத் தவிர்த்து மிதமான மழைபெய்யும் இடங்களில் வளரும் ஒரு எண்ணெய்வித்து மரமாகும்.
- இது ஒரு நீண்ட நெடுமரம். இதன் இலையுதிர் காலமானது குறுகிய காலமான பிப்ரவரி முதல் மார்ச் வரை.
- இம்மரமானது நல்ல வடிகால் வசதி உள்ள மண்ணில் நன்றாக வளரும். கடினமான மண்வகைகள் சாகுபடிக்கு உகந்தவை அல்ல. இது ஒரு பசுமையான வறட்சியைத் தாங்கி வளரக்கூடிய மரம்.



● ஆண்டு சராசரி மழையளவு 70 செ.மீ இருந்தால் போதுமானது. கடல் மட்டத்திலிருந்து சுமார் 800 கிலோ மீட்டர் உயரமுள்ள மலைச்சரிவுகளில் பயிர் செய்யப்படுகிறது.

● இம்மரமானது விதை மூலம் பயிர் செய்யப்படுகிறது. அதுவும் நன்றாகப் பழுத்த பழத்தை பறவைகள் தின்று அதன் எச்சத்தின் வழியாக விதையை வெளியேற்றுவதால் அவ்விதையானது பிற இடங்களில் முளைத்து மரமாகிறது. விதையின் முளைப்புத் தன்மையானது 3 முதல் 4 வாரங்கள் வரை மட்டுமே இருக்கும்.

● இதற்காக விதை நன்றாக தண்ணீரில் ஊறவைத்து தாய்பாத்தியில் விதைக்க வேண்டும்.

● 6 மாத நாற்றுக்கள் நடுவதற்கு ஏற்றதாகும். அவற்றை 3x3 மீட்டர் முதல் 5x5 மீட்டர் இடைவெளியில் 1x1 அடி குழியில் நட வேண்டும்.

● வேம்பு நட்ட 6 அல்லது 7 ஆண்டுகளில் பூத்து, காய்க்க ஆரம்பிக்கும். மண்வளத்துக்கேற்ப வேம்பு 8 முதல் 100 ஆண்டுகள் வரை சீரான மகசூலைத் தரும்.

● எட்டு வயதிற்கு மேற்பட்ட வேப்ப மரத்திலிருந்து சராசரியாக வருடத்திற்கு 350 கிலோ கிராம் தழையைப் பெறலாம்.

**பயன்கள்**

● இதன் தழைகளை பசுந்தழை உரமாக பயிர் சாகுபடியில் பயன்படுத்தலாம்.

● இம்மரங்களிலிருந்து 12.5 டன் கொட்டையைப் பெறலாம். பருப்பில் 48.9 சதம் எண்ணெயும், தோலுடன் சேர்ந்த விதையில் 23.5 சதம் எண்ணெயும் கிடைக்கிறது. 3 சத வேப்ப எண்ணெய் கரைசலை பயிர் பாதுகாப்பில் பயன்படுத்தலாம்.

● விறகாக மரம் ஒன்றுக்கு 400 கிலோ கிராம் கிடைக்கும்.

● மரக்கரி 30.9 சதம் கிடைக்கும்.

● உயிர்டீசல் உற்பத்திக்கு வேம்பு மரம் ஒரு சிறந்த மூலப்பொருள் ஆகும்.

● இதன் பருப்பினை 5 சதக் கரைசலாக பயிர் பாதுகாப்பில் பயன்படுத்தல்.

● ஜன்னல், மரக்கதவு போன்ற மர சாமான்கள் செய்வதற்கு பயன்படுத்தலாம்.

இத்தகைய வேம்பு மரத்தை தரிசு மற்றும் வறண்ட நிலத்தில் பயிரிட்டு பயனடையலாம். வேளாண்துறை மூலம் செயல்படுத்தப்படும் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் மற்றும் NMEO-மர வகை எண்ணெய்வித்துப் பயிர்கள் ஆகிய திட்டங்களில் விநியோகம் செய்யப்படும் வேப்பங்கன்றுகளை மேற்கண்ட பயன்களைக் கருத்தில் கொண்டு விவசாயிகளை வாங்கி பயனடையலாம் என்று சேலம் மாவட்டம், வீரபாண்டி வேளாண்மை உதவி இயக்குநர் பா.கார்த்திகாயினி கேட்டு கொண்டுள்ளார்.


நானோ யூரியா பிளஸ்
20 சதவீதம்
தழைச்சத்து கொண்ட நானோ திரவம்
500 மிலி
ரூ.225/-
இலைவழி தெளிப்பு
1லி. நீருக்கு 5 மி.லி
IFFCO
NANO UREA PLUS
ஒரு ஏக்கருக்கு, ஒரு தெளிப்பிற்கு 500 மி.லி
முதல் தெளிப்பு - முக்கிய வளர்ச்சி பருவமான கிளைப்பு | தூர்விடும் தருவாய்
இரண்டாம் தெளிப்பு - பூக்கும் பருவத்திற்கு முன்
அனைத்து பயிர்களுக்கும் ஏற்றது.

# ஆடிப்பட்ட நிலக்கடலை சாகுபடியில் அதிக மகசூல் எடுப்பதற்கான தொழில்நுட்பங்கள்? தெரியுமா?



தற்போது வெப்ப சலனம் காரணமாக கடந்த சில நாட்களாக, ஆடி 18யிலிருந்து மழை ஆங்காங்கு பெய்து வருகின்றன. இந்த மழை ஈரத்தை பயன்படுத்தி ஆடிப் பட்ட நிலக்கடலை விதைப்பு படுவேகமாக நடை பெற்று வருகிறது. சில இடங்களில் இன்னும் விதைப்பு ஆரம் பிக்கவில்லை. இருந்தாலும்கூட நிலக்கடலை சாகுபடியில் அதிக மகசூல் எடுப்பதற்கான வழிமுறைகள் என்ன என்ன என்பதை தெளிவாக விரிவாக பார்ப்போம்.

**1) இரகத்தேர்வு :** நிலக்கடலையில் தற்போது ஏகப்பட்ட புது புது ரகங்கள் (ஆந்திரா, குஜராத்) ரகங்கள் வந்த வண்ணமாக இருக் கின்றன. நம்முடைய மண்ணிற்கேற்ற தரமான சான்று பெற்ற (CERTIFIED SEED) விதைகளை வாங்கி பயன்படுத்த வேண்டும். ஏக்கருக்கு 50-55 கிலோ பருப்பு தேவை. பெரிய விதை (பருப்பு) களுக்கு 70 கிலோ வரை தேவைப்படும். விதைநேர்த்தி அவசியம் செய்ய வேண்டும் டி.விரிடி 1 கிலோ பருப்பிற்கு 4 கிராம் என்ற அளவில் கலக்க வேண்டும்.

**2) நிலத் தயாரிப்பு :** மணற்பாங்கான செம்மண் வண்டல் மண் சிறந்தது. சட்டிக் கலப்பை கொண்டு உழுதபின் 4 முறை வரிசை உழவுபோட வேண்டும். தொழ உரமாக ஏக்கருக்கு மக்கிய சாண உரம் 5 டன் இட வேண்டும்.

**3) பயிர் எண்ணிக்கை பாரமரித்தல் :** நிலக்கடலை விதைக்கும் போது வரிசைக்கு வரிசை 30செ.மீ-யும் செடிக்கு செடி 10 செ.மீ இடைவெளியில் (30x10) விதைக்க வேண்டும். சதுரமீட்டருக்கு 33 செடிகள் இருக்க வேண்டும் (ஒரு ஏக்கருக்கு 3.33.333 செடிகள்) இருக்க வேண்டும். கூடுதலான மகசூல் பெற பயிர் எண்ணிக்கை பராமரிப்பு அவசியமாகும்.

**4) உரமிடுதல் :** மண்பரிசோதனை ஆய்வின்படி உரமிட வேண்டும். இல்லாத பட்சத்தில் பொது பரிந்துரைக்க மானா வாரிக்கு முறையே 4:4:18 NPK என்றளவிலும் இறவைக்கு 7:14:21 NPK என்றளவில் தழை மணி சாம்பல் சத்துகளை இடவேண்டும். அடியுரமாக ஏக்கருக்கு 100 கிலோ ஜிப்சம் இட வேண்டும். நுண்ணூட்ட உரமாக வேளாண் துறை தயாரித்த (MICRO NUTRIENT MIXTURE) ஏக்கருக்கு 5 கிலோ இட வேண்டும்.

**5) களை மேலாண்மை :** மற்ற பயிர்களை காட்டிலும் நிலக்கடலையில் களை எடுப்பது அவசியம் களை எடுக்காத பயிர் கால் பயிரே என்பது பழமொழி களை எடுக்க எடுக்க நிலக்கடலை அதிகமாக விழுதுவிட்டு காய்க்கும். மண் இறுக்கத்தையும் களைச்செடிகளின் ஆதிக் கத்தையும் தடுக்கும்.

**6)ஜிப்சம் இடுதல் :** நிலக்கடலைக்கு இராண்டாம் களைக்குபின் அவசியம் ஏக்கருக்கு 80 கிலோ ஜிப்சம் இட வேண்டும். ஜிப்சத்தில் கால்சியம் 23%யும் சல்பர் 18%யும் இருக்கும். இவை நிலக்கடலையில் திரட்சியான பருப்பு உருவாக்குவதுடன் அதிக அளவாக எண்ணெய் சத்தை உருவாக்கும். எனவே ஜிப்சம் இடுதல் மகசூல் அதிகரிக்க உதவும்.

**7) ஊட்டசத்து கரைசல் தெளிப்பு :** TNAU தயாரித்த கடலை ரீச் என்ற உரக்கலவையை இருமுறை 25, 45வது நாளில் ஏக்கருக்கு 2.5 கிலோ / 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். அல்லது டி.ஏபி உரம் 1 கிலோ + அம்மோனியம் சல்பேட்400 கிராம் + போராக்ஸ் 200 கிராம் கலந்த கலவை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து ஒரு ஏக்கருக்கு தெளிக்க வேண்டும்.

**8) ஊடுபயிர் சாகுபடி :** நிலக்கடலை பயிரில் ஊடுபயிராக தட்டைபயறு துவரை கம்பு போன்ற பயிர்கள் பயிரிடலாம். இதனால் கூடுதலான வருமானம் வருவதுடன் பூச்சி/ நோய் தாக்குதல் குறைவாக இருக்க வாய்ப்பு உள்ளது.

**9) அறுவடை உத்திகள் :** முதிர்ந்த இலைகள் காய்வதும், மேல்மட்ட இலைகள் மஞ்சளாக மாறுவதும் காய்கள் முதிர்ச்சியை குறிக்கும். கடலை தோளின் உட்புறம் பழுப்புகலந்த கருப்பு நிறத்தில் இருக்க வேண்டும்.

10) செடியிலிருந்து காய்களை பிரித்து மிதமான வெயிலில் உலர்த்தி சேமிக்கலாம். காய்கள் 12% ஈரப்பதமாக இருக்க வேண்டும். நிலக்கடலையாக விற்பனை செய்யாமல் மதிப்புக் கூட்டப்பட்ட பொருளாக எண்ணெய், கடலை மிட்டாய் கடலை புண்ணாக்கு) விற்பனை செய்தால் கூடுதலான வருமானம் கிடைக்கும். நிலக்கடலை ஒரு எண்ணெய் வித்து பயிராக இருந்தாலும்கூட இன்றைய கால கட்டத்தில அது ஒரு பணப்பயிராக (வர்த்தக பயிராக) கருதப்படுகிறது என்றால் மிகையல்ல.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# பயறு வகைகளை தாக்கும் நச்சுயிரி நோய்களும் அவற்றின் மேலாண்மை முறைகளும்

**துவரையில் மலட்டுத் தேமல் நச்சுயிரி நோய்**

ஆரம்பத்தில் இலைகளில் நரம்புகளைச் சுற்றிலும் வெளுத்து மஞ்சளாகக் காணப்படும். நாளடைவில் இலைப்பாகங்களில் இடையிடையே இள மஞ்சள் வளையம் தோன்றித் தேமல் தோற்றம் ஏற்படும். மஞ்சள் வளையம் தோன்றும் இந்த வளையப்புள்ளிகளால்



மலட்டுத்தன்மை தோன்றாது. சில சமயங்களில் லேசான தேமல் தோன்றும். இதில் பகுதி மலட்டுத்தன்மை ஏற்படும். இலைகளில் அடர் பச்சை நிறமும், வெளிர்பச்சை நிறமும், இளமஞ்சள் நிறமும் மாறிமாறி காணப்படும். பாதிக்கப்பட்ட இலைகள் மென்மையாக இல்லாமல் கடினமாக இருக்கும்.

இலைகள் சுருங்குதல், இலைப்பரப்பு குறைதல், கிளைகளின் கணுக்கள் குறைதல், பாதிக்கப்பட்ட செடி முழுவதும் குட்டையாக இருத்தல் போன்ற அறிகுறிகளும் காணப்படும்.

இளஞ்செடிகள் நோயினால் பாதிக்கப்பட்டால் செடிகள் வளர்ச்சிக் குன்றி கட்டையாக இருக்கும். இலைகள் அடர்த்தியாக அருகருகே இருப்பதால் செடியின் தலைப்பாகம் புதர் போன்று காட்சியளிக்கும். அத்தகைய செடிகள் மலட்டுத் தன்மை பெறுவதால் பூக்கும் திறனிழந்து விடுகின்றன. செடிகள் வளர்ந்த பிறகு நோயினால் பாதிக்கப்பட்டால் தேமல் அறிகுறிகள் மட்டும் காணப்படும். மலட்டுத் தேமல் நச்சுயிரி நோயுற்ற செடியிலிருந்து, மற்ற செடிகளுக்கு அசெரியா கஜானி என்னும் கண்ணுக்குத் தெரியாத சிலந்தியின் மூலம் பரவுகிறது. சிலந்திகள் காற்றின் உதவியால் மற்ற செடி களுக்கு நோயை தொற்ற உதவுகிறது.

**உளுந்து மஞ்சள் தேமல் நோய்**

இந்நோயின் முதல் அறிகுறி, இளம் இலைகளில் ஆங்காங்கே மஞ்சள் நிறப்புள்ளிகள் காணப்படும். பின்னர் தோன்றும் இலைகளில் ஒழுங்கற்ற வடிவம் உள்ள மஞ்சளும், பச்சையும் கலந்த பகுதிகள் தோன்றும். சில சமயம் நோயுற்ற இலைகள் சிறுத்தும், சுருங்கியும் காணப்படும். நோயுற்ற செடிகளில் காய்களும், விதைகளும் மஞ்சளாக மாறிவிடும். வயலில் ஒரு செடியிலிருந்து மற்ற செடிகளுக்கு பெமீசியா டெபாசி என்கின்ற வெள்ளை ஈயினால் பரவுகிறது. களைச்செடிகள் மூலம் நச்சுயிரி எளிதாக பரவுகிறது.

**உளுந்து இலைச்சுருட்டை நோய்**

நோயுற்ற செடிகளிலுள்ள இலைகள் வளைந்து, நெளிந்து சுருட்டிக் கொண்டிருக்கும். இவ்வாறு இலைகள் சுருண்டிருப்பதால் அவற்றின் ஓரங்கள் ஒழுங்கற்ற வடிவத்தை பெற்று கீழ்நோக்கி வளைந்து இருக்கும். இலைகள் மொரமொரப்புடன், நரம்பு பகுதியுலுள்ள திசுக்கள் தாக்கப்பட்டு பின் படர்ந்து இலை காம்பை தாக்கும். தாக்கப்பட்ட செடிகளில் நுனிக்கருகல் காணப்படும். அதிக அளவில் மகசூல் இழப்பு ஏற்படும். இலைப்பேன் மூலம் பரவுகிறது.

### உளுந்து இலைப்புள்ளி நெளிவு நோய்

நோயுற்ற செடிகளிலுள்ள இலைகளில் நரம்புகளுக்கிடைப்பட்ட பகுதி தாழந்தும், குறுகியும் காணப்படுகின்றது. இதனால் நோயுற்ற இலைகள் மேடுபள்ளமுள்ள பரப்பைக் கொண்டிருக்கும். இலைகள் சுருங்கி, கணுக்கள் குறைந்து காணப்படுவதால் செடிகள் குட்டையாக அடர்ந்து காணப்படும். பூக்கும் தருணம் தாமதமாகும். தாக்கப்பட்ட செடிகளில் தோன்றும் பூக்கள் சிறியதாக மலராமல் இருக்கும். விதை பாதிக்கப்பட்ட இலைகளிலுள்ள இலைச்சாறு மற்றும் வெள்ளை ஈ (பெமிசியா டபசி) மூலம் பரவுகிறது.

### உளுந்து நுனிக்காய்தல்

இதுவும் வைரஸ் நோயில் ஒன்றாகும். செடியின் நுனிப்பகுதி விரைவில் காயத் தொடங்கிவிடும். பின் நுனிப்பகுதியிலுள்ள தழைப் பகுதிகளை காயச்செய்கிறது. பின்பு இக்காய்தல் அறிகுறி சிறிது சிறதாக கீழ்நோக்கிப் பரவி செடி முழுவதையும் அழித்து விடுகின்றது. இலைப்பேன் மூலம் பரவுகிறது.




### பயிர் பாதுகாப்பு முறைகள்

நச்சுயிரி நோயைக் கட்டுப்படுத்த, முதலில் அதனை பரப்பும் பூச்சியைக் கட்டுப்படுத்த வேண்டும். நோயின் அறிகுறி தென்பட்டவுடன் மோனோகுரோட்டோபாஸ் ஒரு எக்டருக்கு 500 மி.லி. அல்லது மீதைல டெமடான் 500 மி.லி. என்ற விகிதத்தில் தெளிக்க வேண்டும். பின்பு இருவாரம் கழித்து மீண்டும் ஒரு முறை தெளிக்க வேண்டும்.

இதனை முனைவர் ந. இரஜினிமாலா, இணைப் பேராசிரியர் (பயிர் நோயியல்), நெல் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், அம்பாசமுத்திரம் – 627 401, திருநெல்வேலி தெரிவித்தார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக, (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# விதை விற்பனை மையங்களில் விதைக்குவியல்கள் ஆய்வு



மதுரை, ஆக.8

மதுரை மாவட்டத்தில் பேரையூர், டி.கல்லுப்பட்டி மற்றும் திருமங்கலம் பகுதிகளில் தற்சமயம் மக்காசோளம் விதைப்பு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதால் விதை விற்பனை மையங்களில் இருப்பு வைக்கப்பட்டிருந்த மக்காச்சோளம், நெல், பருத்தி மற்றும் தக்கைபூண்டு விதைக்குவியல்களை மதுரை, விதை ஆய்வு துணை இயக்குநர் சு.வாசுகி மற்றும் விதை ஆய்வாளர் திருமங்கலம் மோ.கோபி ஆய்வு செய்தனர்.




இதில் விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் ான்றளிப்பு இயக்குநரால் வழங்கப்படும் பதிவுச்சான்று பெறப்படாமலும் முளைப்புத்திறனுக்கான பரிசோதனை முடிவு பெற படா மலும் விற்பனை செய்யப்பட்ட ரூ.24,13,800/- (ரூபாய் இருபத்து நான்கு இலட்சத்து பதிமூன்றாயிரத்து எண்ணூறு மட்டும்) மதிப்புடைய 8,244 கிலோ எடையுள்ள மக்காச்சோளம் மற்றும் நெல் விதைகள் விற்பனை செய்ய தடை விதிக்கப்பட்டது.

மேலும், விவசாயிகளுக்கு தரமான விதைகளை அனைத்து விவரங்களும் அடங்கிய உரிய விலைப்பட்டியலுடன் வழங்க வேண்டும் எனவும், உரிய ஆவணங்கள் இன்றியும், விதை இருப்புப் பட்டியல் மற்றும் கோப்புகள் சரிவர பராமரிக்கப் படாமலும் இருந்தால் விதை விற்பனை உரிமம் முடக்கம் செய்யப்படும் எனவும் மதுரை, விதை ஆய்வு துணை இயக்குநர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# ஆண்டு முழுவதும் பலன் தரும் மா மரங்கள் அதிசத்தும் பீகார் விவசாயி

– சிறப்பு நிருபர் –

பீகாரில் உள்ள தர்பங்கா நகரத்தைச் சேர்ந்த விவசாயியான அகிலேஷ் சவுத்ரி, தனது பழத் தோட்டத்தில் பலவிதமான மாமரங்களை வைத்துள்ளார். அவை ஆண்டு முழுவதும் காய்க்கின்றன. இதில் முக்கியமான வியம் என்னவென்றால், இந்த மரங்களில் ஒரே நேரத்தில் பூக்கள் ஒருபுறமும், மாங்காய்கள் ஒரு புறமும், பழுத்த மாம்பழங்கள் ஒருபுறமும் இருக்கிறது.

இதுபோன்ற டஜன் கணக்கான மரங்கள் அவருடைய தோட்டத்தில் உள்ளன. வருடம் முழுவதும் அவை விளைச்சளைத் தருகின்றன. இது போன்ற மாமரங்களை நாம் பார்த்திருக்க வாய்ப்பே கிடையாது. பொதுவாக நாம் பார்க்கும் மரங்கள் ஆண்டுக்கு ஒருமுறை, அதாவது கோடை காலத்தில் மட்டுமே பழங்களைத் தரும். ஆனால் இந்த தோட்டத்தில் விளையும் மாம்பழங்கள் அனைத்து பருவ காலங்களிலும் கிடைக்கிறது.

மேலும் அகிலேஷ் சவுத்ரி தனது தோட்டத்தில் ஆண்டு முழுவதும் பழங்களைத் தரும் மரங்களை வளர்த்து வருகிறார். இதனால் அப்பகுதியில் சில மாதங்களை தவிர ஆண்டின் ஒவ்வொரு சீசனிலும் மாம்பழங்கள் கிடைக்கிறது. அந்த மாதங்களில் மாம் பழங்கள் பழுத்த உடன் மரங்கள் உடனடியாக பூக்கத் தொடங்கி விடுகிறது. இந்த வகை மாம்பழங்கள் மிகவும் சுவை கொண்டதாக உள்ளதால், மக்கள் அவற்றை அதிகம் விரும்புகின்றனர்.

இந்த மரங்களில் ஒரே நேரத்தில் பூக்கள், மாங்காய்கள் மற்றும் பழுத்த மாம்பழங்களை நம்மால் காண முடியும். இந்த மரங்கள் முஜாஹ்பூர் மாவட்டத்திலிருந்து கொண்டுவரப்பட்டவை என்றும், ஒவ்வொரு மாங்காய் எடையும் 500 கிராம் முதல் இருக்கும் என்றும் அகிலேஷ் கூறியுள்ளார்.

சமீபத்தில் கூட ஒரு விவசாயி ஜப்பான் நாட்டைச் சேர்ந்த மியாசாகி மாம்பழங்களை உடுப்பியில் பயிரிட்டு சாதித்துக் காட்டினார். இதிலிருந்து நாம் ஒன்றை மட்டுமே எடுத்துக் கொள்ள வேண்டும். முடியாது என்ற ஒன்று இல்லை. சற்று முயற்சி செய்தால் எதுவும் சாத்தியமே என்பதற்கு இது மற்றொரு எடுத்துக்காட்டு.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# இப்கோ- முற்றிலும் நீரில் கரையும் உரங்கள்

**பொட்டாசியம் நைட்ரேட்- 13-0-45**

பொட்டாசியம் நைட்ரேடில் 13% தழைச்சத்தும் 45% சாம்பல்சத்தும் உள்ளது.

**பயன்படுத்தும் முறை**

ஒரு லிட்டர் நீருக்கு1 0-15 கிராம் கலந்து பூக்கும் பருவத்திற்கு பின்அல்லது பயிரின் முதிர்ச்சி பருவத்தில் 2-3 முறை தெளிக்கவும்.

**போரான்(20% B)- பயன்படுத்தும் முறை**

ஒருலிட்டர்நீருக்கு1-2கிராம்கலந்துபூக்கும்பருவத்தில்10-15 நாட்கள்இடைவெளியில்2-3முறைதெளிக்கவும்.

**போரான்(14.5% B)- பயன்படுத்தும் முறை**

ஒருஏக்கர்களிமண்மற்றும்கனமானமண்வகைகளுக்கு4-6 கிலோவும்மணல்கலந்தமண்மற்றும்கடினமானமண்வகைகளுக்கு2-4 கிலோவும்விதைப்பின்பொழுதுபயன்படுத்தவும்.








**நன்மைகள்**

- பூக்கள், காய்கள் மற்றும் விதைகள் உருவாவதை மேம்படுத்தும்.
- பிஞ்சுகள் மற்றும் பூக்கள் உதிர்வதை தடுக்கும்.
- பழங்களின் தரம் மற்றும் மகசூலை அதிகரிக்கும்.
- காய்கள் மற்றும் பூக்களின் உற்பத்தியை மேம்படுத்தும்.
- போரானை பயிர்களில் பயன்படுத்துவதால் பயிர்களில் கால்சியம் உறிஞ்சுதலை அதிகரிக்கிறது.

- ADVT.

# சணப்பில் சாம்பல் நோய் - அறிகுறிகள் மற்றும் மேலாண்மை

**அறிகுறிகள்**

பூஞ்சாணம் இலை, இலைக்காம்பு, தண்டு, பூங்கொத்து, பிஞ்சு, காய் முதலிய அனைத்துப் பகுதிகளையும் தாக்குகிறது.

நோயுற்ற பகுதிகளில் வெண்மைநிறத் துகள்கள் இலைகளின் மேற்பரப்பிலும், சில சமயம் இலைகளின் கீழ்பரப்பிலும் காணப்படும்.

நாளடைவில் இவை ஒன்றோடொன்று இணைந்து பழுப்பாகி பின்பு கருமை நிறமாக மாறி இலைப்பரப்பு முழுவதும் மூடிவிடும். பாதிக்கப்பட்ட செடி வளர்ச்சிக் குன்றி வாடி வதங்கிவிடும்.

இந்நோய் பிஞ்சுகள் விட்டபின் தோன்றினால், பிஞ்சுகள் முற்றுவதில்லை. முதிர்ச்சியுறும் பருவத்தில் தென்பட்டால், காய்கள் சிறியனவாகவும், சுருங்கியும் காணப்படும். நாளடைவில் பாதிக்கப்பட்ட பிஞ்சு, காய்கள் கருமை நிறமாகி கீழே விழுந்துவிடும். நோயுற்ற இலைகள் மூலமாகவும், காற்றின் மூலமாகவும் இந்நோய் பரவுகிறது.

**மேலாண்மை**

வேப்பங்கொட்டைச்சாறு 5 சதம் அல்லது வேப்பெண்ணை 3 சதம் இரண்டு முறை 10 நாட்கள் இடைவெளியில் நோய் கண்டவுடன் தெளிக்க வேண்டும்.

யூகலிப்டஸ் இலைச்சாறு 10 சதம் நோய் கண்டவுடன் மற்றும் 10 நாட்கள் கழித்தும் தெளிக்கவும்.

எக்டர் ஒன்றுக்கு கார்பன்டாசிம் 250 கிராம் அல்லது நனையும் கந்தகத்தூள் 2.5 கிலோ தேவையான தண்ணீரில் கரைத்துத் தெளிக்கவும் என சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் வேலு தெரிவித்தார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# கோக்கலை கிராமத்தில் விவசாயிகள் பயிற்சி

நாமக்கல், ஆக.8

நாமக்கல் மாவட்டம், எலச்சிபாளையம் வட்டாரம் வேளாண்மைத் துறையின் சார்பில் அட்மா திட்டத்தின் கீழ் கோக்கலை கிராமத்தில் வேளாண்மை விற்பனை மற்றும் வணிகத் துறையின் உழவர் உற்பத்தியாளர் குழு நிறுவனம், நிர்வாகம் மற்றும் செயல்பாடுகள் என்ற தலைப்பில் 40 விவசாயிகளுக்கு பயிற்சி நடைபெற்றது.

இப்பயிற்சியில் அட்மா குழு வட்டார விவசாயிகள் ஆலோசனைக் குழு தலைவர் தங்கவேல் மற்றும் உறுப்பினர்கள் முன்னிலை வகித்தனர். இப்பயிற்சியில் வேளாண்மை உதவி இயக்குநர் ஜெயமாலா தலைமை வகித்து வேளாண்மைத் துறை சார்ந்த மத்திய, மாநில திட்டங்கள், நுண்ணீர் பாசனம், விதைப்பண்ணை முறைகள் மற்றும் வேளாண்மை விரிவாக்க மையத்தில் இருப்பு வைக்கப்பட்டுள்ள வேளாண் இடுபொருட்கள் பற்றி விவசாயிகளுக்கு கூறி விவசாயிகளின் சந்தேகங்களுக்கு விளக்கமளித்தார்.

இப்பயிற்சியில் சின்னமணலி இயற்கை உழவன் உழவர் உற்பத்தியாளர் குழு நிறுவன தலைமை நிர்வாக அதிகாரி நந்தினி கலந்து கொண்டு உழவர் உற்பத்தியாளர் குழு நிறுவனம், நிர்வாகம், செயல்பாடுகள், இயற்கையான முறையில் விளைப்பொருட்களை மதிப்புக்கூட்டுப் பொருட்களாக மாற்றி லாபம் பெறுதல் போன்றவற்றை பற்றி விரிவாக குழு விவசாயிகளுக்கு கூறி விளக்கமளித்தார்.

வேளாண்மை விற்பனை மற்றும் வணிகத்துறை உதவி வேளாண்மை அலுவலர் பாலலிங்கேஸ்வரன் இ.சந்தை, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை திட்டங்கள் பற்றி விரிவாக கூறினார்.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் திவாகர் உழவன் செயலி பதிவிறக்கம், பயன்பாடுகள் மற்றும் அட்மா திட்டத்தின் செயல்பாடுகளை பற்றி விரிவாக எடுத்து கூறினார்.

இப்பயிற்சிகான ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் வாசுகி மற்றும் தமிழ்ச்செல்வன் ஆகியோர் செய்திருந்தனர்.

# ஆடிப்பட்டத்திற்கு ஏற்ற கேழ்வரகு இரகங்கள் மற்றும் பயிரிடும் முறைகள்!

ஆடி பட்டதில் கேழ்வரகு சாகுபடி செய்து விவசாயிகள் பயன்பெற அறிவுறுத்தப்படுகிறது.

**இரகங்கள் :** பையூர் 1,கோ 13,கோ.ஆர். ஏ 14, பையூர் 2

**பயிரிடும் முறைகள்**

**பயிர் சுழற்சி**

பச்சை பயறு, உளுந்து, கொள்ளு, சோயாபீன், மொச்சை அல்லது வேர்கடலை இப்பயிர்களுடன் பயிர் சுழற்சி முறையில் பயிரிடலாம்.

**கலப்பு பயிர்**

மானாவாரி பகுதியில் கேழ்வரகுடன் துவரையை கலப்பு பயிரகாக 4:1 என்ற விகிதத்தில் பயிர் செய்வதால் அதிக விளைச்சல் கிடைக்கும் என சேலம் மாவட்டம், காடயாம்பட்டி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் செல்வம் கூறினார்.

# ரூ.38 லட்சத்துக்கு புழுதியூர் சந்தையில் மாடுகள் விற்பனை



தர்மபுரி, ஆக.9

அரூர் அடுத்த புழுதியூர் சந்தையில், 38 லட்சம் ரூபாய்க்கு மாடுகள் விற்பனையாகின.

தர்மபுரி மாவட்டம், அரூர் அடுத்த புழுதியூரில், நேற்று கூடிய சந்தைக்கு, கலப்பின மற்றும் ஜெர்சி வகையைச் சேர்ந்த, 180 மாடுகள் மற்றும் கன்றுகளை விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

கலப்பின மாடு ஒன்று, 45,000 முதல், 68,000 ரூபாய் வரை விற்பனையானது. அதே போல், வளர்ப்பு மாட்டுக்கன்று ஒன்று, 8,000 முதல், 28,000 ரூபாய் வரை விற்பனையானது. நேற்று நடந்த சந்தையில், 38 லட்சம் ரூபாய்க்கு வர்த்தகம் நடந்தது என, வியாபாரிகள் தெரிவித்தனர்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்
# ‘தானியங்கி வேளாண் வானிலை சேவைக்கான செயலி‘

விவசாயிகளுக்கு தடையில்லாமல், தங்கள் கிராமத்தின் வானிலை சார்ந்த விபரங்களும், தங்கள் பயிருக்கு தேவையான வானிலை சார்ந்த பயிர்சாகுபடி விபரங்களும் உடனடியாக கிடைப்பதற்காக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் உருவாக்கியுள்ள ‘தானியங்கி வேளாண் வானிலை சேவை‘ அலைபேசி செயலியினை பயன்படுத்தி வானிலை இடர்பாடு களைத் தவிர்க்குமாறு வேளாண் பெருமக்களை கேட்டுக் கொள்கிறோம்.

கூகுள் பிளே ஸ்டோர் (லிங்க்)இணைப்பில் tnauaas என டைப் செய்து தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் உருவாக்கி உள்ள ‘தானியங்கி வேளாண் வானிலை சேவை‘ என்ற செயலியினை பதிவிறக்கம் செய்து ஆன்ட்ராய்டு மொபைலில் நிறுவலாம். இச்செயலியினை செயல்படுத்தியவுடன் மேல்புற வலது மூலை பகுதியில் காணப்படும் மூன்று கோடுகளை தொட்டால் கிடைக்கும் தொகுப்பில் ‘பதிவு செய்ய‘ என்ற வார்த்தையினை கிளிக் செய்து தங்கள் சுயவிபரங்களையும் கடவுச்சொல்லினையும் பதிவிட வேண்டும்.

முக்கியமாக, தங்களின் பெயர், தந்தை பெயர், மாநிலம், மாவட்டம், வட்டாரம், மொபைல் எண் மற்றும் 8 இலக்க கடவுச்சொல் ஆகிய 7 விபரங்களை மட்டும் பதிவிட்டால் போதுமானது. ஏனைய விபரங்கள் அவசியம் தேவையில்லை.

அதன் பின் தாங்கள் பதிவு செய்த மொபைல் எண்ணையும் கடவுச்சொல்லினையும் உபயோகப்படுத்தி செயலியினுள் உள்நுழைய வேண்டும். அங்கு தாங்கள் பயிரிட்டுள்ள அல்லது ஓரிரு வாரங்களுக்குள் பயிரிடப்போகும் பயிரினையும் விதைப்பு தேதியினையும் பதிவிட வேண்டும். இதன்மூலம் தங்களின் பயிருக்கு தேவையான வானிலை சார்ந்த ஆலோசனைகள் வாரத்திற்கு ஒன்று அல்லது இருமுறை இந்த செயலியில் கிடைக்கும். ஒரு விவசாயி எத்தனை பயிராக வேண்டுமானாலும் பதிவு செய்யலாம். பதிவு செய்துள்ள பயிர்களைத் தொட்டவுடன் அதற்குரிய ஆலோசனைகள் காண்பிக்கப்படும்.

தங்கள் கிராமத்தின் வானிலை சார்ந்த விபரங்களுக்கு மேல் இடதுபுறம் உள்ள மூன்று பட்டைகளை தொட்டு தெரியும் தொகுப்பில் ‘வானிலை‘ என்ற சொல்லை சொடுக்கவும். பின் தங்களின் மாவட்டம், வட்டாரம் மற்றும் கிராமத்தினை தேர்ந் தெடுத்தால் கடந்தவார வானிலையும் எதிர்வரும் வார வானிலையும் அட்டவணையில் தெரியும். இதேபோல ‘கடவுச்சொல்லை மாற்ற‘ என்ற சொல்லை சொடுக்கி தேவைப்படு ம்போது வேறு கடவுச்சொல்லை மாற்றிக்கொள்ளலாம். தங்களின் கடவுச்சொல்லை மறந்துவிட்டால், உள் நுழையும் பக்கத்தில் ‘கடவுச்சொல் அறிய‘ என்ற சொல்லை சொடுக்கினால் தங்களின் மொபைல் நம்பரில் கடவுச்சொல் மாற்றப்பட்டு தங்களுக்கு தெரிவிக்கப்படும் கடவுச்சொல்லின் மூலம் உள்நுளைந்து பின் வேறு மாற்றிக்கொள்ளலாம்.




இந்த செயலியினை உபயோகப்படுத்துவதில் ஏதேனும் சந்தேகம் ஏற்பட்டால் 94439 35107 அல்லது 94861 86076 என்ற எண்களை அழைத்து அல்லது வாட்ஸாப்பில் தெரிவித்து தெளிவு பெறலாம். இதேபோல் ஏதேனும் தவறான தகவல் பெறப்பட்டால் உடனடியாக மேற்கூறிய எண்களில் தெரிவித்து இந்த செயலியினை மேம்படுத்துவதற்கு உதவிட வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறோம்.

இதனை, சத்தியமூர்த்தி நா.க., தீபாகரன் க., கோகிலவாணி செ., செந்தில்வேலு வை., ரவிக்குமார் ரா. மற்றும் சச்சின் செ., வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், பயிர் மேலாண்மை இயக்ககம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோவை தெரிவித்தனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**